# கத்தோலிக்க திருச்சபை எதிர்கொள்ளும் சவால்களுக்கான பதில்கள்




**தூய மரியன்னை பேராலயம்**
**யாழ்ப்பாணம்**
**2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபை

❖ **கத்தோலிக்க திருச்சபை கடவுளால் நிறுவப்பட்டது**

கத்தோலிக்க திருச்சபை இயேசுவால் (கடவுளால்) நிறுவப்பட்டது. இயேசு நிறுவிய ஒரே ஒரு திருச்சபையின் எல்லா அம்சங்களும் கத்தோலிக்க திருச்சபையில் நிறைவாக இருக்கின்றன. இயேசு இதைத் தன் பன்னிரெண்டு திருத்தூதர்களின் மேல் நிறுவினார். இதனால் இது திருத்தூதர்களை அத்திவாரமாகக் கொண்டு, அவர்களை காலந்தொட்டு அவர்களின் வழித்தோன்றலாகக் காலாகாலமாக திருத்தந்தையர்களின் வழிகாட்டலில், அன்றுதொட்டு இன்றுவரை பயணித்து வருகிறது. (மத் 16:18)

❖ **கத்தோலிக்க திருச்சபை உயிருள்ள சபை**

கத்தோலிக்க திருச்சபை, அருட்சாதனங்களை வழங்குவதிலும், தன்னிடம் ஒப்படைக்கபட்ட விசுவாசக் கருவூலத்தைக் காப்பதிலும், இவற்றிலிருந்து ஊன்றெடுக்கும் ஆளும் பணி, போதிக்கும் பணி, அர்ச்சிக்கும் பணி ஆகியவற்றை கல்விப்பணி, மருத்துவப்பணி, சமூகப்பணி போன்றவற்றின் ஊடாக செயற்படுத்துவதிலும் விழிப்பாயிருக்கிறது. (தி.பா 20:28)

❖ **கத்தோலிக்க திருச்சபையில் இயேசு இருக்கிறாரா?**

கத்தோலிக்க திருச்சபையில் இயேசுவின் பிரசன்னம் முழுமையாக இருக்கிறது. கத்தோலிக்கத் திருச்சபையின் ஆதிமுதல் இருந்து வருகின்ற சபை. இதைத்தான் இயேசு "என் திருச்சபை" என்கிறார். (மத் 16:18) இந்த சபையோடு உலக முடிவுவரை இருப்பதாக வாக்களித்தார். (மத் 28:20; எபே 2:20-22) இயேசு திருச்சபையோடு இருந்து அதைத் தொடர்ந்து தூயதாக்கிப் புதுப்பிக்கிறார், பேணி வளர்க்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ யார் மீட்பு அடைவார்கள்?

மீட்பு கடவுள் ஒருவரால்தான் மனிதருக்குக் கொடுக்க முடியும். (எசா 43:1)

மனந்திரும்பும் யாவருக்கும் பரிகாரமாக இயேசுவால் இலவசமாக வழங்கப்படும் நன்கொடையே மீட்பு (எபே 2:8)

கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் விசுவாசம், திருமுழுக்கு வழியாக மீட்பு அடைந்திருக்கிறார்கள்.

மீட்பு என்பது ஒருநாள் அனுபவம் அல்ல. மாறாக வாழ்க்கை முடிவுவரை வளரவேண்டிய ஒன்று. (உரோ 8:236-249).

❖ கிறிஸ்தவ மார்க்கத்திற்குள்ளே பல பிரிவுகள் உண்டு. இவை கிறிஸ்துவுக்கு விருப்பமானதா?

பிரிவினைகள் கிறிஸ்துவின் திரு இதயத்திற்கு முரண்பாடாகவும் நற்செய்தி அறிவிப்பதற்கு தடையாகவும், உலகதிற்கு இடறலாகவும் இருப்பது உண்மையே.

இயேசு மரித்ததே அனைவரையும் ஒன்று சேர்க்கத்தான். (எபே2:14, யோவா 11:52, 17:21)

❖ திருச்சபை மக்களை மோட்சம் கொண்டு சேர்க்கும் என்று என்ன நிச்சயம்?

மோட்சம் சேர்வதற்குத் தேவையான தெளிவான போதனையும் அருட்சாதனங்களும் திருச்சபையில்தான் இருக்கின்றன. (மத் 28:19-20, யோவான் 6, யாக் 5:14-16)

கிறிஸ்துவின் மறையுடலாம் திருச்சபையில் இயேசு செயல்படுகிறார் (எபே 2:27,22) திருச்சபையின் வழியாக விசுவாசிகளை அவர் மோட்சம் சேர்க்கிறார். (எபே 1:23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ இயேசு திருச்சபையை ஏற்படுத்தக் காரணம் என்ன?

- இழந்திருந்த அருளை திரும்பவும் தருவதற்கென தாம் ஏற்படுத்திய ஏழு அருட்சாதனங்களை தக்க முறையில் வழங்கவும்
- தாம் வெளிப்படுத்திய உண்மைகளை தவறாமல் எவ்வித பிழையும் இல்லாமல் போதித்து மக்களை ஆண்டு நடத்தவும் (மத் 28:19, லூக் 22:19-20, யோவா 21:15-17, 2திமோ 1:6)
- நற்செயல்களைப் புரிந்து மக்களின் துன்பங்களைப் போக்கவும் கிறிஸ்துவுக்கு சாட்சியாய் இருக்கவும் ஆகும். (மத் 25:31-46)

❖ ஆதித் திருச்சபைதான் கத்தோலிக்க திருச்சபை என்று எப்படிச் சொல்லலாம்.

- வரலாற்று நூல்களிலே இதற்கு போதுமான ஆதாரங்கள் உண்டு.
- புனித இராயப்பர் காலத்தில் வாழ்ந்த ஆயரான புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார் இதைத்தான் கத்தோலிக்க திருச்சபை என்று அழைத்தார். (எபே 2:22, யூதா 20)

❖ லூத்தருக்கு முந்தின காலங்களிலும் பிரிவினை ஏற்பட்டதா?

தப்பறைக் கொள்கைகள் ஏற்பட்டதுண்டு. அப்போஸ்தலர் காலத்திலே தப்பறைகள் இருந்துள்ளன என்பதற்குப் பல உதாரணங்கள் இருந்துள்ளன. (2 திமோ 2:18)

- ஆதி சபையில் விருந்தசேதனமும் மீட்புக்கு அவசியம் என்ற தப்பறை (திரு.பணி 15:5)
- 4ம் நூற்றாண்டில் இயேசு கடவுள் இல்லை. (ARIANISM) 'மாதா கடவுளின் தாய் இல்லை' (NESTORIANISM) என்ற தப்பறைகள்.
- கி.பி 1055ம் ஆண்டு கீழைத் திருச்சபை, திருச்சபையை விட்டு பிரிந்து சென்றது. இது கோட்பாட்டின் அடிப்படையில் அல்ல அரசுகளுக்கிடையே ஏற்பட்ட பிரச்சனையால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➤ 15ம் நூற்றாண்டின் லூத்தருக்கு முன் வாழ்ந்த, கபிரியேல் பியெல் என்பவரின் பைபிள் ஒன்றே போதும் என்ற தப்பறை.

❖ **கத்தோலிக்க திருச்சபையின் இயல்புகள் எவை?**

1) ஏகம் 2) பரிசுத்தம் 3) கத்தோலிக்கம்

4) அப்போஸ்தலிக்கம்

## சுரூபங்கள் – சிலை வழிபாடு

❖ **ஆலயங்களில் சிலைகள் வைத்திருப்பது முறையா? அது விக்கிரக வழிபாடா?**

➤ இறைவன் இஸ்ராயேல் மக்கள் மத்தியில் பிரசன்ன மாயிருப்பதை அவர்களுக்கு நினைவுபடுத்துவதற்காக ஒரு பேழை, அதன் மேல் ஒரு அரியணை, அதன் இரண்டு புறங்களிலும் இரண்டு கெருபீம் உருவங்கள் செய்து வைக்கச் சொன்னார். அதிலிருந்து அவர்களோடு பேசினார். (வி.ப 25:10-22, எ.பி 9:5)

➤ பேழைக்கு முன் முகங்குப்புற விழுந்து கடவுளை ஆராதித்தார்கள் (எண் 20:6,யோசு 7:6)

➤ பேழைக்கு முன் பலி செலுத்தினார்கள் (2 சாமு 6:13-14)

➤ சுருபங்களை வைத்திருப்பதால் அது விக்கிரக ஆராதனை ஆகிவிடாது. பழைய ஏற்பாட்டில் காண்பதைப்போல (மேலே குறிப்பிட்டபடி) புதிய ஏற்பாட்டில் மனு உரு எடுத்த இயேசுவையும் அவரது திருத்தாயையும் அவருடைய புனிதர்களையும் நினைவுபடுத்துவற்காக சுரூபங்களை வைக்கின்றோம்.

❖ **சுரூபங்களை கடவுளாக வழிபாடு செய்வது முறையா?**

சுரூபங்களை கடவுளாக நினைத்து வழிபடுவது தவறு. சுரூபங்கள் - இயேசு, மாதா, புனிதர்களை நினைவுபடுத்துகிற சின்னங்களே. (2அர 18:4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ சுரூபம் நினைவுச் சின்னமானால் ஏன் முழங்கால் படியிட்டு செபிக்கக வேண்டும்?

மோயீசனும், யோசுவாவும் இஸ்ராயேலின் பெரியவர்களும் உடன் படிக்கைப் பேழைக்கு முன்பதாக மண்யிட்டு செபித்தார்கள். கடவுளின் பிரசன்னத்தை பேழை வெளிப்படுத்துவதாக அமைந்ததால் தான் அப்படி செபித்தார்கள். (வி.ப 34:34, யோசு 7:6)

எனவே முழங்கால் படியிடும்போது முழங்கால் தரையில் இருக்கிறது கண்கள் சுரூபத்தில் இருக்கிறது. இதயமோ பரலோகத்தில் இருக்கிறது.

❖ சுரூபங்களைக் குறித்து திருச்சபை என்ன போதிக்கிறது?

➢ கி.பி 787 இல் நிசாயா என்ற இடத்தில் "புனிதர்களுக்கு செய்யும் வணக்கம் விக்கிரக ஆராதனை அல்ல. புனிதர்களின் திருவுருவங்களுக்கு சங்கை செய்வது அவர்களுக்கு சேர்வதால் அது பக்திக்குரியது என்று அறிவிக்கப்பட்டது.

➢ 2ம் வத்திக்கான் சங்கம் "விசுவாசிகளின் வணக்கத்திற்காக கோயில்களில் திருவுருவங்களை வைக்கும் வழக்கம் நிலைத்து நிற்கட்டும். ஆனால் இவை கிறிஸ்தவ மக்களிடையே வியப்பை விளைவிக்கமாலும் தவறான பக்தியில் அவர்கள் இன்பம் காணாமலும் இருக்குமாறு சுரூபங்களை குறைந்த அளவிலும் சரியாக வரிசைப்படுத்தியும் வைக்க வேண்டும் என்கிறது.

❖ பரம்பொருளான தெய்வத்தை உருவத்தில் காட்ட முடியுமா?

➢ பரம்பொருளான தெய்வம் இயேசு மனு உருவில் தம்மை வெளிப்படுத்தினார். (யோ 1:14,18, பிலி 2:7, கலா 4:4,5 எபி 10:5)

➢ நான் தந்தையினுள் இருக்கின்றேன். தந்தை என்னுள் இருக்கிறார் (யோ 14:11) என்றும் "என்னைக் காண்பவன் பிதாவைக் காண்பான் (யோ 14:9) என்றும் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ இது தவிர பரிசுத்த ஆவி புறா வடிவிலும் (லூக் 3:22) அக்கினி நாவு உருவத்திலும் புலப்படும் வடிவெடுத்து (திப 2:3) இறங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

❖ மனித கைவேலையால் செய்யப்பட்ட உருவங்களை வணங்குவது தவறு பைபிள் சொல்லவில்லையா?

பைபிள் முழுவதுமாக சிலை வழிபாட்டை கடவுள் கண்டிக்கிறார். பழைய ஏற்பாட்டில் சிலை வழிபாடு என்றால்,

1) மிருகங்களை தெய்வமாக தொழுவது (விப. 32:6; நெகே 9:18; 1அர 12:30; ஏரே 44:17)
2) சூரியன், சந்திரன், விண்மீன்கள், நெருப்பு, காற்று இவைகளுக்கு வழிபாடு செய்வது (2அர 23:5)
3) மனித இச்சைகளைத் தூண்டும் அருவருப்பான உருவங்களைத் தொழுவது (2அர 16:10; 12:17; 23:13, எரே 32:34, எசே 16:17, 1அர 13)

குறிப்பிட்டு சொல்வதனால் படைத்தவருக்கு கொடுக்க வேண்டிய இடத்தை படைக்கப்பட்ட பொருள்களுக்குக் கொடுப்பது. அதாவது இவைகளைத் தெய்வமாக வழிபடுவது விக்கிரக ஆராதனை ஆகும். (விப 32:1-6; 20:3-5)

❖ கத்தோலிக்க திருச்சபை சிலை வழிபாடு செய்கிறதா?

சுருக்கமாகச் சொல்வதென்றால் கத்தோலிக்க திருச்சபையில் சிலை வழிபாடு என்ற குற்றச்சாட்டுக்கு இடமேயில்லை. கடவுளால் படைக்கப் பட்ட எந்த ஒரு பொருளையும் கத்தோலிக்க திருச்சபை கடவுளாக வணங்குவது கிடையாது. புனிதர் வணக்கம் சிலைவழிபாடு அல்ல. அது இறைவனால் மகிமைப்படுத்தப்பட்டவர்களை நாமும் மகிமைப் படுத்தும் செயலாகும். இறைவனே புனிதர்களை மகிமைப்படுத்தும் போது நாம் ஏன் அவர்களை மகிமைப்படுத்தக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் புனிதர்களுக்கு பரிந்துரை செய்யும் வல்லமையைக் கொடுத்திருக்கிற போது நாம் அவர்களிடம் பரிந்துரை செய்யுமாறு மன்றாடுவதில் என்ன தவறு?

## மரியன்னை

❖ மரியாவை வணங்குவது முறையானதா?

மரியாவுக்கு செலுத்துகிற வணக்கம் கடவுளுக்குச் செலுத்துகிற ஆராதனை அல்ல. கடவுள் ஒருவரையே ஆராதிக்க வேண்டும். (மத் 4:10).

கடவுளுக்கு ஆராதனையும், புனிதர்களுக்கு வணக்கமும், மரியாவுக்கு மேலான வணக்கமும் செலுத்த வேண்டுமென்பதே திருச்சபையின் போதனை.

❖ மனிதப் பெண்ணாக இருக்கின்ற மரியாவை கனம் செய்தல் வேதத்துக்கு ஏற்புடையதா?

நாங்கள் மரியாவை கனப்படுத்துவதற்கு வேதம்தான் சொல்லிக் கொடுக்கிறது. "என்னை மதிப்போரை நான் மதிப்பேன்" (1சாமு 2:30) என்கிறார் இறைவன்.

1) ஆபிரகாம், மோயீசன் என்று பெயர் சொல்லி அழைக்கும் மூவொரு இறைவன் வானதூதர் வழியாக மரியாவை "அருள் நிறைந்தவளே வாழ்க" என்று வாழ்த்தி அவளைக் கனம் பண்ணினார். (லூக் 1:28).
2) இயேசுவைக் கருத்தாங்கிய வேளையில் "இதோ எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே" (லூக் 1:48) என்று அன்னை தீர்க்க தரிசனமாக சொல்லி எல்லா மனிதர்களும் எக்காலத்திலும் அவரை கனம் பண்ணுவார்கள் என அறிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் மரியாவே என்று கபிரியேல் தூதரும் (லூக் 1:28) ஆவியால் நிரப்பப்பட்ட எலிசபெத்தமாளும் (லூக் 1:42) கனம் பண்ணினார்கள்.

❖ மரியாவை கத்தோலிக்கர்கள் ஏன் போற்றுகிறார்கள்?

இந்தக் கேள்வியை திருமுழுக்கு யோவானின் தாய் எலிசபேத்திடமும் கபிரியல் தூதரிடமும் கேட்டிருந்தால் இதற்கான விடை கிடைக்கும். (லூக் 1:41)

1) மீட்பரின் தாயாக தேர்ந்துகொள்ளப்பட்டதாலும்
2) எந்த நபரும் பெற இயலாத மகிமையை கடவுளிடமிருந்தே பெற்றிருப்பதாலும்
3) கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்ட எந்த இறைவாக்கினரும் புனிதரும் கடவுளோடு, கடவுளின் மகனோடு இத்தகைய ஐக்கியம் பெற்றதில்லை என்பதாலும் மரியாளைப் போற்றுகின்றோம். (லூக் 1:48)

❖ **மரியா நம்மைப் போல் மனிதப் பிறவி தானே! வணக்கத்திற்குரியவளா?**

இயேசு வாழ்ந்த, நடந்து சென்ற இடங்களை புனித பூமி என்றும் திருத்தலம் என்றும் முழங்கால் படியிட்டு வணங்குகின்றோம். அப்படியானால் இயேசுவை தன் உதரத்தில் தாங்கி பெற்று வளர்த்து உலகின் மீட்பராக ஈந்த தாய் எவ்வளவோ வணக்கத்திற்குரியவள்.

மரியாவை இயேசு 'அம்மா' என்று அழைத்தார். இயேசுவை மரியாள் 'மகனே' என்று அழைத்தாள். (லூக் 2:48) "என் ஆண்டவருடைய தாய்" (லூக் 1:43) என்று எலிசபேத்தம்மாள் உரைத்தாள். எனவே இந்த தாய்மகன் உறவில் மரியாள் வணக்கத்திற்குரியவள் ஆகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **மரியாவை பிற சபையினர் ஏற்றுக்கொள்ள தயங்குகின்றனரே அவர்களுக்கு கத்தோலிக்கராகிய உமது பதில் என்ன?**

தயக்கம் பிற சபையினருக்கு மட்டுமல்ல, நீதிமானாகிய புனித சூசையப்பருக்கே குழப்பம ஏற்பட்டது.

கபிரியல் தூதர இவர்களை சந்தித்து அன்று பரலோகத்திலிருந்து கொண்டு வந்த அதே கட்டளையை,"மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம்" என்று கூறினால் இவர்கள் தயக்கம் தீரலாம். (மத் 1:20)

அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சிலுவையில் தொங்கும் போது "இதோ உன் தாய்" என்று இயேசு சொன்னதையாவது ஏற்றுக்கொள்ளட்டும்.

❖ **மரியா உடலோடும் ஆன்மாவோடும் விண்ணுக்கு எடுத்துக் கொள்ளபட்டாள் என்பதை எப்படி ஏற்றுக்கொள்வது.**

ஏனோக்கும் (தொட 5:24), எலியாசும் (2அர 2:11) கடவுளால் விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டதை நம்பும் போது, கடவுளின் தாய்க்கு செய்யப்பட்டதை ஏன் மறுக்க வேண்டும்.

மண்ணுலகில் வேறு எவ்விதப்பற்றுமின்னி, இயேசுவுடனே இணைந்திருந்த அன்னை மரியாள், மரணத்திற்குப் பின்னும் விண்ணிலே இயேசுவுடன் இணைந்திருப்பது இயல்பான ஒன்றுதான். புனிதத்தின் சிகரமான மரியாள் விண்ணகம் செல்லாவிட்டால், வேறு யார் தான் விண்ணகம் சென்றிருக்க முடியும்.

❖ **மரியாயின் மாசில்லாத உற்பவம் என்றால் என்ன?**

மரியன்னை தனது தாயாகிய புனித அன்னாளில் வயிற்றில் கருத்தரித்த போது இறைவன் அவரை சென்ம பாவத்திலிருந்து காத்தார். எல்லா மனிதர்களும் பிறக்கும் போது சென்ம பாவத்தோடு பிறக்கிறார்கள். ஆனால் மரியாவுக்கு மட்டும் இறைவன் விதிவிலக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தார். ஏனெனில் அவள் இறைமகனாகிய இயேசுவை கருத்தாங்க வேண்டியிருந்தது.இதையே மரியாவின் மாசில்லாத உற்பவம் என்கின்றோம்.

❖ மரியா முப்பொழுதும் கன்னி என்பதன் பொருள் என்ன?

இயேசுவைப் பெற்றெடுக்க முன்னரும், இயேசுவின் பிறப்பின் போதும், இயேசு பிறந்த பின்னரும் மரியாவை இறைவன் கன்னியாகவே பேணிவந்தார். அவருடைய கன்னிமைக்கு எப்பொழுதுமே யாதொரு களங்கமும் ஏற்படவில்லை.

❖ ஒப்புரவு அருட்சாதனம் பற்றியும் சில விடயங்களைச் சேர்த்துக் கொள்ளலாம். குறிப்பாக நாம் ஏன் குருவிடம் பாவ அறிக்கை செய்யவேண்டும்?

## ஒப்புரவு அருட்சாதனம் (பாவ சங்கீர்தனம்)

❖ ஒப்புரவு அருட்சாதனம் செய்வதால் என்ன பயன்? ஏன் செய்ய வேண்டும்?

- ➢ கடவுளுக்கு அவ்வப்போது கொடுக்க வேண்டிய ஆத்தும கணக்கை சரியாகக் கொடுக்க முடிகிறது (லூக் 19:15), ஆன்மீக திருப்தி ஏற்படுகின்றது.
- ➢ நம் மனச்சாட்சி கூர்மையடைகிறது. (லூக் 19:17)
- ➢ பாவத்திற்கு ஏதுவான வழிகளிலிருந்து ஆன்மாவை விடுவிக்கிறது. (யோ 8:11)
- ➢ பாரமான மனதை இலேசாக்கி உள்ளத்தில் ஆறுதலையும் அமைதியையும் உண்டாக்குகிறது. (லூக் 7:50)
- ➢ முறிந்த உறவு திரும்பவும் புதுப்பிக்கப்படுகிறது (லூக் 15:24)
- ➢ மன்னிப்பு நிச்சயம் கிடைக்கிறது (லூக் 7:48)
- ➢ பாவங்களை செய்யாதிருக்க அருளுதவி கிடைக்கிறது (லூக் 15:22,23)
- ➢ இறையரசின் மக்களாக மாறி வாழ முடிகிறது (லூக் 19:9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ இயேசு மட்டுமே பாவங்களை மன்னிக்க முடியும். குருவிடம் ஏன் கூற வேண்டும்?

நோய்களை குணமாக்கவும், பேய்களை ஓட்டவும் ஆற்றலும் அதிகாரமும் கொண்டிருந்த இயேசு அதே ஆற்றலையும் அதிகாரத்தையும் சீடர்களுக்கு கொடுத்து அனுப்பி வைக்கிறார். அது போல பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ள இயேசு தம்முடைய சீடர்களுக்கு பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை வழங்கினார். (யோவான் 20:23)

திருச்சபையில் இவ்வதிகாரத்தைப் பெற்றுள்ள குருக்கள் இயேசுவின் பெயரால் பாவங்களை மன்னிக்கின்றனர். கிறிஸ்துவுக்குள் தெய்வீகம் இருந்ததால் பாவங்களை மன்னிக்க முடிந்தது போல (மாற் 2:7) குருவானவருக்குள் கிறிஸ்து இருந்து மன்னிப்பை வழங்குகின்றார். ஆகவே இயேசுவிடம் அறிக்கையிடுவது போலவே குருக்களிடமும் பாவங்களை அறிக்கையிடுகின்றோம்.

❖ குருவானவர் பாவங்களை மன்னித்தால் தான் பாவம் மன்னிக்கப் பெறுமா?

எல்லோருக்கும் மன்னிக்கும் கடமை உண்டு, உரிமையும் உண்டு. இதுவே பொது நியதி.

ஆனால் ஒப்புரவு வழங்குவது அப்போஸ்தலர் வழித்தோன்றல்களுக்கு கொடுக்கப்பட்ட பணியாக இருக்கின்றது. "ஒப்புரவு செய்யும் திருப்பணியை எங்களுக்குக் கொடுத்தார்" (2 கொரி 5:18). எனவே இயேசுவிடமும் அவரது பிரதிநிதியாகிய குருவிடமும் அறிக்கையிட்டு மன்னிப்புப் பெற வேண்டியது அவசியமாயிருக்கிறது (லூக் 22:61,62).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **பிற சபைகளில் பாவ அறிக்கை செய்வது போல் நாமும் சபையில் சத்தமிட்டு சொன்னால் என்ன?**

சபையில் சத்தமிட்டு பாவ அறிக்கை செய்யும் பொழுது உள்ளத்தின் ஆழத்தில் இருக்கிற அனைத்தையும் ஒளிவு மறைவு இன்றிச் சொல்வீர்களா? மனித இயல்பு – அச்சம், கூச்சம், நாணம், தன்மானம் போன்ற மனித உணர்வுகள் தடையாகின்றன.

பிற சபையினர் சத்தமாக அறிக்கையிட்டாலும் கனமான பாவங்களை அறிக்கையிடுவதும் அவசியம். இதைச் செய்தால் நல்லது. கனமான குற்றங்களை அறிக்கையிடும் பொழுது சில வேளைகளில் அதுவே பல பிரச்சனைகளுக்கு காரணமாகி விடுகிறது. எனவே இத்தகைய நிறைவற்ற பாவ மன்னிப்பை விட்டுவிட்டு இயேசு விரும்பும் நிறைவான ஒப்புரவு அறிக்கை செய்வதே நல்லது. (நீதி 28:13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org